MINISTRY OF
MANPOWER

# முறையாய் வேலை செய்திடுங்கள்!

சிங்கப்பூரில் வசிப்பதற்கும் வேலை செய்வதற்குமாக வெளிநாட்டுப் பணியாளர்களுக்கான வழிகாட்டி



# கதாபாத்திரங்கள் பற்றி



மணி, சாம், லீ ஆகியோர் வெளிநாட்டைச் சேர்ந்த பணியாளர்கள், இவர்கள் ஒரே கட்டுமானத் தளத்தில் வேலை செய்கிற நல்ல நண்பர்கள். இவர்கள், இடைவேளை நேரத்தில் அரட்டையடித்தும், தங்களின் விடுமுறை நாட்களில் வெளியில் சுற்றியும் மகிழ்கின்றனர்.

இந்தியாவிலிருந்து வந்துள்ள மணி ஒரு வருட காலமாக சிங்கப்பூரில் வேலை செய்துகொண்டுள்ளார், அதேபோல சீனாவிலிருந்து வந்துள்ள அவரது நண்பரான லீ மூன்று ஆண்டுகளாக சிங்கப்பூரில் பணியாற்றிக் கொண்டுள்ளார். இவர்கள் சிங்கப்பூரில் நன்கு குடியமர்ந்து வசித்து வருவதுடன், தங்களின் பணி உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி நன்கு அறிந்துள்ளனர். இது இவர்களின் பணி அனுபவத்தை இடையூறில்லாதப் பயணமாக ஆக்கியுள்ளது, ஏனெனில், தங்களின் உரிமைகள் மீறப்படும்போது MOM-ஐயும், தங்களின் பணிவழங்குனரையும் எப்போது அணுகுவது என்பதை இவர்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளனர்.

சாம், பங்களாதேஷிலிருந்து வந்து இவர்களின் கட்டுமானக் குழுவில் புதிதாய் சேர்ந்திருப்பவர். சாம், சிங்கப்பூரில் ஒருசில மாதங்களே இருந்திருப்பதால், சிங்கப்பூரில் எவ்வாறு சிறந்த பணிக் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பது என்பது தொடர்பான பயனுள்ள குறிப்புகளையும் ஆலோசனையையும் பெறுவதற்கு மணியையும் லீயையும் சார்ந்திருக்கிறார்.

திரு. ச்சூ, பலதரப்பட்ட ஆர்வமிகு பணியாளர்களின் குழுவிற்கான, சிங்கப்பூரைச் சேர்ந்த மேற்பார்வையாளராக உள்ளார் - இவர், மற்றவர் சொல்வதை எப்போதுமே செவிமடுக்கத் தயாராக இருப்பதுடன், தனது குழுவைச் சேர்ந்தவர் எவரேனும் உதவிநாடி தன்னிடம் வரும்போது அதற்கான சரியான தீர்வு காண்பவராக உள்ளார்.

ஒன்றிணைந்து, இந்த 3 நண்பர்களும், பணியாளர்கள் எனும் முறையில் தங்களின் உரிமைகள் பற்றி மேலதிகமாய் தெரிந்துகொண்டும், இந்த பாதுகாப்பான மற்றும் தூய்மையான நாட்டில் பணியாற்றுகிற நினைவில்கொள்ளத்தக்க தருணத்தையும் கொண்டு, சிங்கப்பூரில் தங்களின் பணிப் பயணத்தை வழிநடத்துவார்கள்!



# சட்டவிரோதமாய் பணியமர்த்துதல்



## உங்கள் பணிப்பதவியில் வேலை செய்வதற்கு செல்லுபடியாகிற ஒர்க் பாஸ் (WP) உங்களிடம் இருக்கவேண்டும்.




செல்லுபடியாகிற WP இல்லாமல் வேலை செய்தால், உங்களுக்கு $20,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 2 வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடும்.

# பகுதிநேர வேலை & சுய தொழில்



# நீங்கள் கூடுதலாய் சம்பாதிப்பதற்காக; சுயதொழில் செய்யவோ, ஏதேனும் வியாபாரத்தில் பங்கேற்கவோ, இரண்டாவது வேலை செய்யவோ கூடாது.




நீங்கள் பகுதிநேர வேலை அல்லது சுயதொழில் செய்வதாக கண்டறியப்பட்டால், உங்களுக்கு $20,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

# MOM வசமிருந்து உரிமம் பெறாமல் பணியமர்த்தும் முகமைச் செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்



# MOM வசமிருந்து உரிமம் பெறாமல் ஏதேனும் வகையான பணியமர்த்தும் முகமைச் செயல்பாடுகளை மேற்கொள்வது சட்டவிரோதமானது.

நீங்கள்:

- எவருக்கேனும் வேலை தேடித்தர உதவுவதற்காக அவர்களிடமிருந்து சொந்த ஆவணங்களை அல்லது பணி விண்ணப்பப் படிவங்களை சேகரிக்கக்கூடாது.
- ஏதேனும் பணி வழங்குனர் அல்லது பணி விண்ணப்பதாரர் சார்பாக ஒர்க் பாஸ் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் கூடாது.
- பணி வழங்குனருடன் பணி விண்ணப்பதாரர்களை சேர்த்துவைக்க உதவக்கூடாது.



உங்களுக்கு $80,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடும்.

# உரிமம் பெறாத பணியமர்த்தும் முகமையை நடத்துதல்



# உரிமம்பெறாத பணியமர்த்தும் முகமையின் சேவைகளை உபயோகிப்பது சட்டவிரோதமாகும். உங்கள் பணியமர்த்தும் முகவர், MOM'வுடன் பதிவுசெய்துள்ளாரா என்பதை சரிபார்த்திடுங்கள்.

உங்கள் பணியமர்த்தும் முகமை, MOM'வுடன் பதிவுசெய்திருப்பவரா என்பதை எப்போதுமே சரிபார்த்திடுங்கள் – உங்கள் பணியமர்த்தும் முகவரின் பதிவு அட்டையைக் காண்பதற்குக் கேட்டு, அதை www.mom.gov.sg/eadirectory-ல் இருக்கிற MOM EA டைரக்டரியில் சரிபார்த்திடுங்கள்.




உரிமம்பெறாத ஓர் பணியமர்த்தும் முகமையை உபயோகித்தால், உங்களுக்கு $5,000 அபராதம் விதிக்கப்படக்கூடும்.

# பணியமர்த்தும் முகமைக் கட்டணங்கள் - கட்டண வரம்பும் திருப்பிக் கொடுத்தலும்



# உங்கள் ஒப்பந்தத்தின் அல்லது ஒர்க் பாஸ் (WP)-ன் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு மாத சம்பளத்தை மட்டுமே செலுத்த வேண்டியிருக்கிறது...

சிங்கப்பூரில் பணியமர்த்தும் முகமையை உபயோகிக்கும்போது, நினைவில்கொள்ளுங்கள்:

- உங்கள் WP அல்லது பணி ஒப்பந்தம் ஆகியவற்றில் எது விரைவில் முடிவுறுகிறதோ அதன் அடிப்படையில், ஒவ்வொரு வருடத்திற்கும், கட்டணமாக 1 மாத சம்பளத்திற்கும் அதிகமாய் செலுத்தக்கூடாது.
- உங்கள் பணி ஒப்பந்தம் 2 ஆண்டுகளுக்கும் மேலாக செல்லுபடியாவதாய் இருந்தாலும்கூட, முகமைக் கட்டணமாக அதிகபட்சமாய் 2 மாத சம்பளத்தை மட்டுமே செலுத்தவேண்டியிருக்கிறது.
- வழங்கப்படுகிற சேவைகள் அனைத்திற்குமான கட்டணங்களைக் காட்டுகிற இரசீதை முகமை உங்களுக்கு கட்டாயம் கொடுக்கவேண்டும். உங்களுக்கு உதவுவதற்கு, அத்தகைய இரசீதுகளை MOM-மிடம் நீங்கள் காட்டவேண்டும்.
- உங்கள் பணிவழங்குபவர் உங்களது ஒப்பந்தத்தை 6 மாதங்களுக்குள் முடித்துவிட்டால், முகமை, நீங்கள் செலுத்திய முகமைக் கட்டணங்களின் குறைந்தது 50% தொகையாவது உங்களுக்கு அவசியம் திருப்பித்தரவேண்டும். நீங்கள் பணியிலிருந்து விலகிக்கொள்ள தீர்மானித்தால், உங்களால் பணத்தைத் திரும்பப் பெற முடியாது.




முகமைக் கட்டணங்கள் தொடர்பாய் உங்களுக்கு விவகாரங்கள் ஏதுமிருந்தால், அதை நீங்கள் பின்வரும் வழியில் MOM-க்கு தெரியப்படுத்தலாம்:

தொலைபேசி: **6438 5122**

அல்லது நேரில் சென்றிடுங்கள்:

**Ministry of Manpower Services Centre**
1500 Bendemeer Road Singapore 339946

# பணம்கொடுக்க மறுப்பு தெரிவியுங்கள்



# பணியமர்த்துவது தொடர்பாய் உங்கள் பணிவழங்குனர் உங்களிடம் பணம் கேட்பது சட்டவிரோதமாகும்.

உங்களை பணியமர்த்துவது தொடர்பான செலவுகளை உங்கள் பணிவழங்குனரே ஏற்கவேண்டும் - பின்வருவதற்கான பணம் கொடுக்குமாறு உங்கள் பணிவழங்குனர் கேட்பது சட்டவிரோதமாகும்:

- வேலை கொடுப்பது
- ஒர்க் பாஸ் புதுப்பிப்பு
- பிணையப் பத்திரம்
- மருத்துவக் காப்பீடு
- தாய்நாடு திரும்புவதற்கான செலவுகள்
- கட்டாயப் பயிற்சி
- மருத்துவக் கட்டணம்
- வரி செலுத்துதல்



உங்கள் பணிவழங்குனர், உங்களைக் கட்டணம் செலுத்தும்படி செய்தால் அல்லது அதை உங்கள் சம்பளத்திலிருந்து பிடித்துக்கொண்டால், அதை நீங்கள் பின்வரும் வழியில் MOM-க்கு புகாரளிக்கலாம்:

தொலைபேசி: **6438 5122**

அல்லது நேரில் சென்றிடுங்கள்:

**Ministry of Manpower Services Centre**
1500 Bendemeer Road Singapore 339946

## ஊதியத்தை வழங்குதல்



# ஒவ்வொரு மாதமும் முறையாக, ஊதியம் வழங்கும் காலத்தின் 7 நாட்களுக்குள் நீங்கள் ஊதியத்தைப் பெற வேண்டும்.

ஊதியம் வழங்கும் காலத்திற்கு பின்பு 14 நாட்களுக்குள் கூடுதல் நேர ஊதியம் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்.

பின்வரும் காரணங்களைத் தவிர வேறு எதற்கு உங்கள் நிறுவனம் ஊதியத்தில் பிடித்தம் செய்யக் கூடாது:

- வேலைக்கு வராமல் இருத்தல்.
- உங்கள் நிறுவனத்தினர் வழங்கிய உணவின் கட்டணம்.
- தங்குமிடம், வசதிகள் மற்றும் சேவைகள்.
- முன்தொகை (அட்வான்ஸ்), கடன்கள் அல்லது அளிக்கப்பட்ட மிகை ஊதியம் போன்றவற்றைக் கழித்தல்.



உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது உதவி தேவைப்பட்டால், எங்கள் ஹாட்லைனை அழைக்கவும்:

தொலைபேசி: **6438 5122**

அல்லது இங்கு செல்லவும்

**Ministry of Manpower Services Centre**
1500 Bendemeer Road Singapore 339946

# வேலை நேரம், ஓவர்டைம் மற்றும் ஓய்வு நாள்



# உங்கள் பணி நேரங்கள் ஒரு நாளில் 8 மணிநேரங்கள் அல்லது வாரத்திற்கு 44 மணிநேரங்கள் என்பதை மீறக்கூடாது.

நீங்கள் கூடுதல் நேரங்கள் வேலை செய்தால், உங்கள் நிறுவனம், உங்கள் அடிப்படை சம்பளத்தை விட 1.5 மடங்கான கூடுதல் நேர சம்பளத்தைக் கண்டிப்பாகத் தர வேண்டும்.

உங்கள் கூடுதல் நேர சம்பளத்தைக் கணக்கிட பின்வரும் படிநிலைகளைப் பின்பற்றவும்:

**படி 1:**
உங்களுக்கான ஒரு மணிநேரத்திற்கான அடிப்படை ஊதியத்தைக் கணக்கிடவும்:

ஒரு மணிநேர அடிப்படை ஊதிய வீதம் =

$$\frac{12 \times \text{மாத அடிப்படை ஊதியம்}}{52 \times 44}$$

**படி 2:**
உங்களுக்கான கூடுதல் நேர ஊதியத்தைக் கணக்கிடவும்:

கூடுதல் நேர ஊதியம் = ஒரு மணிநேர அடிப்படை ஊதிய வீதம் x 1.5 x பணி செய்த கூடுதல் மணிநேரங்கள்



உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், எங்கள் ஹாட்லைனை பின்வரும் எண்ணில் அழைக்கவும்:

தொலைபேசி: **6438 5122**

அல்லது இங்கு செல்லவும்

**Ministry of Manpower Services Centre**
1500 Bendemeer Road Singapore 339946

# ஏன் உயிரை ஆபத்துக்கு உள்ளாக்குகிறீர்கள்?



# பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றவும், எப்போதும் குறுக்குவழிகளை எடுக்க வேண்டாம்.

சரியான தனிநபர் பாதுகாப்பு சாதனங்களை (PPE) பயன்படுத்தவும், வேலையை விரைவாக முடிப்பதற்காக குறுக்கு வழிகளைப் பின்பற்ற வேண்டாம் - பாதுகாப்பே முதன்மையானது!



பணியிடத்தில், ஏதேனும் பாதுகாப்பில்லாத பணி நடைமுறைகளை நீங்கள் கண்டால், பின்வரும் எண்ணுக்கு அழைத்து அதைப் பற்றி MOM இடம் புகாரளிக்கவும்:

தொலைபேசி: **6317 1111**

அல்லது இங்கு செல்லவும்

**Ministry of Manpower Services Centre**
1500 Bendemeer Road Singapore 339946

# ஒரு சுத்தமான, பாதுகாப்பான வாழும் சூழல்



# நீங்கள் சிங்கப்பூரில் வேலை செய்யும்போது, உங்கள் நிறுவனம் உங்களுக்கு சுத்தமான மற்றும் பாதுகாப்பான பணியிடத்தை வழங்க வேண்டும்.

விட்டின் விதிகளைப் பின்பற்றுவது மற்றும் உங்கள் வாழும் இடத்தை நல்ல நிலையில் பராமரிப்பது போன்றவற்றின் மூலம் அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்ய உங்கள் பங்கையும் நீங்கள் கண்டிப்பாக அளிக்க வேண்டும்.

ஏற்றுக்கொள்ள முடியாத தங்குமிடங்கள் என்று கருதப்படுபவையில் பின்வருபவை அடங்கும்:

- சட்டத்திற்கு புறம்பான தற்காலிக கட்டுமானங்கள்.
- மோசமான சுகாதாரம்.



ஏற்கமுடியாத தங்குமிடத்தில் நீங்கள் தங்க வைக்கப்பட்டிருந்தால், பின்வரும் எண்ணில் MOM ஐ அழைக்கவும்:

தொலைபேசி: **6438 5122**

அல்லது இங்கு செல்லவும்

**Ministry of Manpower Services Centre**
1500 Bendemeer Road Singapore 339946

## அதிக மக்கள் நெருக்கடி



# உங்கள் தங்குமிடத்தில் அதிக மக்கள் நெருக்கடி கண்டிப்பாக இருக்கக் கூடாது.

இதற்காகவே கட்டப்பட்ட தங்குமிடங்கள், தொழிற்சாலை இடத்திலிருந்து மாற்றியமைக்கப்பட்ட தங்குமிடங்கள் மற்றும் கட்டுமான தளங்களில் உள்ள குடியிருப்புகளில் நீங்கள் தங்க வைக்கப்படலாம். அங்கீகரிக்கப்பட்ட வீடுகளிலும் கூட நீங்கள் தங்க வைக்கப்படலாம்.

- கண்டோனியம்கள், கடை வீடுகள், அடுக்குமனை இணைப்பு மற்றும் பங்களா வீடுகளில் 8 பேர் வரை தங்கலாம்.



அதிக நபர்கள் இருக்கும் நெருக்கடியான இடத்தில் நீங்கள் தங்க வைக்கப்பட்டிருந்தால், நீங்கள் MOM ஐ பின்வரும் எண்ணில் அழைக்கலாம்:

தொலைபேசி: **6438 5122**

அல்லது இங்கு செல்லவும்

**Ministry of Manpower Services Centre**
1500 Bendemeer Road Singapore 339946

# பணி & பணியிடச் சிக்கல்களைத் தீர்த்தல்



# உதவி பெற பல வழிகள் உள்ளன. சட்டங்களை மீறாதீர்கள்।

உங்கள் நிறுவனத்துடன் ஏற்பட்டுள்ள பணி சார்ந்த சிக்கல்களுக்கு தீர்வு காண முடியவில்லை என்றால், கூடிய விரைவில் உதவி பெற வேண்டும்.

உங்கள் வேலை தொடர்பான சிக்கல்களைச் சந்தித்தால்,

1. அதைப் பற்றி நிறுவனத்துடன் பேசுங்கள்
2. நிறுவனத்தில் சிக்கல்களைத் தீர்த்து கொள்ள முடியாவிட்டால், நீங்கள் உடனடியாக பின்வருவோரிடம் உதவி பெற வேண்டும்:

**மனித வளத்துறை அமைச்சகம் (MOM)**

தொலைபேசி: 6438 5122
1500 பெண்டிமீர் ரோடு
மனிதவளச் சேவைகள் மைய அமைச்சகம்
(மினிஸ்ட்ரி ஆ:ப் மேன்பவர் சர்வீசஸ் செண்டர்)
சிங்கப்பூர் 339946
வேலை நேரம்: காலை 8 - மாலை 5.30 வரை
(திங்கள் முதல் வெள்ளி வரை)

அல்லது இவர்களிடமிருந்து ஆலோசனைப் பெறவும்:

**குடிப்பெயர்வு பணியாளர் மையம் (MWC)**

Tel: 6536 2692
579 Serangoon Road,
Singapore 218193

*Opening hours:*

*9am – 7pm*
*(Tuesday-Friday)*

*11am – 3pm*
*(Saturday-Sunday)*

*Closed*
*(Monday & Public Holiday)*



## உங்கள் உரிமைகளை அறிந்திருங்கள் - வினாடி வினா



இந்தக் கேள்விகளுக்கு சரியாக பதிலளிக்க முடிகிறதா என்று பாருங்கள்!

**சரியான பதிலை டிக் (  ) குறியால் குறிக்கவும்!**

1. ஒரு பணியாளர் ஏஜெண்ட் பதிவு பெற்றவரா என்று சோதிக்க, ஏஜெண்டின் பதிவு அட்டையை நீங்கள் கேட்கலாம்.

   **சரி** ☐ **தவறு** ☐

2. அயல்நாட்டு பணியாளர்கள், ஊதிய காலத்திற்கு பின், 7 நாட்களுக்குள்ளாக கண்டிப்பாக அவர்களின் சம்பளத்தைப் பெற வேண்டும்.

   **சரி** ☐ **தவறு** ☐

5 பதில்களையும் சரியாக அளிப்பவர்கள், ஒரு சிறப்பு பரிசை வெல்ல முடியும்!!






3. பணியமர்த்துபவர்கள், அவர்களின் அயல்நாட்டு பணியாளர்களுக்கு சுத்தமான மற்றும் பாதுகாப்பான தங்குமிடத்தை அளிக்க வேண்டும்.

**சரி** ☐ **தவறு** ☐

4. நிறுவனங்கள், ஒரு தனிப்பட்ட வீட்டில் 20 நபர்கள் வரை தங்க வைக்கலாம்.

**சரி** ☐ **தவறு** ☐

5. அயல்நாட்டு பணியாளர்கள் கூடுதல் பணத்தைச் சம்பாதிப்பதற்காக, இரண்டாவது வேலையில் ஈடுபடுதல் அல்லது சுயவேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுதல் போன்றவை சட்டத்திற்குப் புறம்பானவை.

**சரி** ☐ **தவறு** ☐

இங்கே ஸ்டாம்பை ஒட்டவும்

